மக்கான் சிங்

–எதிர்–

ஹரியானா மாநிலம்

(உரிமையியல் மேல்முறையீடு எண் 1290/2010)

2022, ஆகஸ்ட் 16

[மாண்புமிகு நீதியரசர் திரு. பி. ஆர். காவை

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. பாமிடிகாந்தம் ஸ்ரீ நரசிம்மா]

சாட்சியம் – இரண்டு மரண வாக்குமூலங்கள் – முதல் மரண வாக்குமூலம் எ.த.சா 1 ஆல் பதிவு செய்யப்பட்டு, மரணமுற்றவர் மேல்முறையீட்டாளரையும் அவர் குடும்பத்தினரையும் குற்றத்திலிருந்து விடுவித்துருந்தார் – இருப்பினும் அ.சா– 6 ஆல் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது மரண வாக்குமூலத்தில் மரணமுற்றவர் மேல்முறையீட்டாளர் அவரது பெற்றோரையும் சிக்கவைத்தார் – விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை இ.த.ச பிரிவு 304–பி ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, அவருக்கு 10 வருடங்கள் கடுஞ்சிறை தண்டனை பிறப்பித்தது – உயர்நீதிமன்றம் தண்டனையை 10 வருடத்திலிருந்து 7 வருடங்களாக குறைத்தது– மேல்முறையீட்டில் தீர்மானித்ததாவது : முதல் மரண வாக்குமூலத்தில்

அ.சா.1–மருத்துவர், மரணமுற்றவர் வாக்குமூலம் அளிப்பதற்கு நினைவுடனும், நல்ல மனநிலையிலும் உள்ளரா என்பதை பரிசோதித்தார் – சான்றளித்த பிறகு, மரணமுற்றவர் தன்னிச்சையாக வாக்குமூலத்தை அளித்தாரா? இல்லையா? என்பதில் எ.த.சா–1 திருப்தியுறவேண்டும் – எனினும் இரண்டாவது மரணவாக்குமூலமானது இறந்தவரின் நிலையை பொறுத்து மருத்துவரால் எந்த ஒரு ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் பதிவு செய்யப்பட்டது– மேலும் அ.சா–13 (மரணமுற்றவரின் தந்தை) மற்றும் அ.சா– 11 (மரணமுற்றவரின் சகோதரி) இருவரும் மருத்துவமனையில் இருந்தனர் என்பதை அ.சா–6 ஒப்புக்கொண்டார் – எனவே இறந்தவரின் உறவினர்கள் பயிற்சி கொடுத்ததன்படி இரண்டாவது மரணம் வாக்குமூலம் கொடுக்கப்பட்டு இருக்கலாம் என்ற சாத்திய கூற்றினை பிறந்தள்ளமுடியாது– இறந்தவர் தன் உறவினர்களின் சொல்படியே வாக்குமூலம் கொடுத்தார் என்று துணைக் காவல் கண்காணிப்பாளர் எ.த.சா–2 (டிஎஸ்பி) தனது சான்றுரையில் தெரிவித்துள்ளார்– மேலும் அரசுத் தரப்பில் எ.த.சா–1 மற்றும் எ.த.சா–2 ஆகிய இருவரும் விசாரிக்கப்படவில்லை – ஆகவே வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இரண்டாவது மரணம் வாக்குமூலத்தை விட முதல் மரணம் வாக்கு மூலமே நம்பகத் தகுந்ததாகவும் கருதப்படுகிறது – அதன்

அடிப்படையில் மேல்முறையீட்டாளர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1. முதல் மரண வாக்குமூலம் (எக்ஸ். டிஒ/சி) எ.த.சா 1–ஆல் பதிவு செய்யப்பட்டது அதன் ஆய்வில் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன் இறந்தவர் வாக்குமூலம் கொடுக்க நல்ல தகுதி வாய்ந்த மனநிலையிலும் தெளிவான சிந்தனையிளும் தான் இருந்தாரா என்பதனை அ.சா.1 ஆய்வு செய்துள்ளார் என்பதனை வெளிப்படுத்துகிறது. சான்றிதழுக்கு பிறகு, இறந்தவர் தன் விருப்பப்படியே வாக்குமூலம் அளித்தார் என்று தன்னைத்தானே திருப்தி படுத்திக் கொண்ட பிறகே அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்தார். மரணவாக்குமூலத்தை (எக்ஸ். டிஒ/சி) கொடுக்கும் பொழுது இறந்தவர் நல்ல மனநிலையில் இருந்தார் என்று அ.சா.1 அங்கீகரித்தார். வாக்கு மூலம் பெறப்பட்ட பிறகும் கூட அந்த வாக்கு மூலம் தன்னிச்சையாக தான் கொடுக்கப்பட்டது என்று இறந்தவரிடம் இருந்து உறுதிப்படுத்திக்

கொண்டதாக எ.த.சா 1 தன் சான்றுறையில் தெரிவித்துள்ளார். [பத்தி 16][365–ஏ–சி].

2. இதற்கு எதிராக, இரண்டாவது மரண வாக்கு மூலத்தை (எக்ஸ் பி.இ) பொருத்தவரையில் மூன்று நாட்களுக்குப் பிறகு வாக்குமூலம் கொடுப்பவரின் உறுதித் தன்மையை பற்றி மருத்துவரின் ஆய்வு மேற்கொள்ளப்படாமல் வேறு ஒரு நீதித்துறை நடுவரால் –அ.சா.6 பதிவு செய்யப்பட்டது. இந்த வாக்குமூலமானது மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட பொழுதும் அங்கு மருத்துவர்கள் இருந்த பொழுதும் இறந்தவரின் மருத்துவ நிலையை அந்த மருத்துவர் களை கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்பதை அ.சா.6 அவசியமானதாக காணவில்லை. இறந்தவரின் தந்தை – அ.சா. 13 மற்றும் இறந்தவரின் சகோதரி –அ.சா.11 ஆகிய இருவரும் மருத்துவமனையில் தான் இருந்தனர் என்று அ.சா.6 தாமாகவே ஏற்றுக் கொண்டார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கது. எனவே இறந்தவரின் உறவினர்கள் பயிற்சி கொடுத்ததன்படி இரண்டாவது வாக்கு மூலம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சாத்திய கூற்றினை விளக்கி பார்க்க முடியாது. (பத்தி 17) (365–டி–ஈ)

3. அரசு தரப்பில் எ.த.சா–1 மற்றும் டி.எஸ்.பி (எ.த.சா– 2) விசாரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இது விசாரணை அதிகாரியின் (ஐ.ஓ) நியாயம் மற்றும் பாராபட்சமற்ற தன்மை குறித்து கடுமையான சந்தேகத்தை உருவாக்குகின்றது. அதுமட்டுமன்றி அதே ஆதாரத்தின் அடிப்படையில் சந்தேகத்தின் பலனின் பெயரிலேயே மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் தாயை விசாரணை நீதிமன்றம் விடுவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விஷயத்தை பொறுத்த வரையில் அதே ஆதாரத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு தண்டனை அளித்தது முறையற்றது. (பத்தி 19) (365– எச்,366–ஏ)

4. எனவே இந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இரண்டாவது மரண வாக்குமூலத்தை (எக்ஸ் பி.இ) விட முதல் வாக்குமூலம் (எக்ஸ். டிஒ/சி) மிகவும் நம்பகமானதாக கருதப்பட வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. எவ்வாறாயினும் குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேருக்கும் எதிரான சாட்சியங்கள் முற்றிலுமாக ஒரே மாதிரியாக இருக்கும் பொழுது குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களுக்கு விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சந்தேகத்தின் பலன் தற்போதைய

மேல்முறையீட்டாளருக்கும் சமமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். (பத்தி 20) [366–பி–சி]

ஹர்ஜித் கௌர் எதிர் பஞ்சாப் மாநிலம் (1999)6 எஸ்.சி.சி 545 : 1999(5)ஜெ.டி 317; சயாரா பானு எதிர் மகாராஷ்டிரா மாநிலம் (2007)12 எஸ்.சி.சி 562 : (2007) 2 எஸ்.சி.ஆர் 354; ஷேர் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் (2008) 4 எஸ்.சி.சி 265 : (2008) 2 எஸ்.சி.ஆர் 959; முன்னவர் எதிர் உ.பி மாநிலம் (2010) 5 எஸ்.சி.சி 451; லக்கான் எதிர் எம் பி மாநிலம் (2010) 8 எஸ்.சி.சி 514 : (2010) 9 எஸ்.சி.ஆர் 705; சுதாகர் எதிர் ம. பி மாநிலம் (2012) 7 எஸ்.சி.சி 569 : (2012) 7 எஸ்.சி.ஆர் 128; ராஜு தேவதே எதிர் மகாராஷ்டிரா மாநிலம் (2016) 11 எஸ்.சி.சி 673 : (2016) 3 எஸ்.சி.ஆர் 818; காஷ்மிரா தேவி எதிர் உத்தரகாண்ட் மாநிலம் (2020) 11 எஸ்.சி.சி 343 : (2020)1 எஸ்.சி.ஆர் 152; உ.பி மாநிலம் எதிர் வீர்பால் (2022) 4 எஸ்.சி.சி 741 – பார்வைக்கு எடுக்கப்பட்டது.

<u>பார்வையிட்ட தீர்வு முடிவுகள்</u>

(2007) 2 எஸ்.சி.ஆர் 354 – பத்தி 7

(2008) 2 எஸ்.சி.ஆர் 959 – பத்தி 7

(2010) 9 எஸ்.சி.ஆர் 705 – பத்தி 7

(2012) 7 எஸ்.சி.ஆர் 128 – பத்தி 7

(2016) 3 எஸ்.சி.ஆர் 818 – பத்தி 7

(2020) 1 எஸ்.சி.ஆர் 152 – பத்தி 7

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 1290/2010.

சண்டிகாரில் உள்ள பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்றத்தால் குற்றவியல் மேல்முறையீடு எண் 1189–எஸ்பி/2002; 15/05/2009 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து.

மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள் ஆர்.கே. ராத்தோர், சுதர்சன் சிங் ராவாட், செல்வி சாக்ஷி எஸ். ராவாட்.

எதிர் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள் பியூஸ்ஷ் ஹன்ஸ், செல்வி. அணு சிங், நவீன் குப்தா, டாக்டர் மோனிகா குசேன்.

நீதிமன்றத்தின் தீர்ப்பினை வழங்கியவர் நீதியரசர் பி. ஆர். காவை .

1. விசாரணை நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண் 55/1998–இல் இந்திய தண்டனைச் சட்டம், 1860 (சுருக்கமாக 'இ.த.ச.')–இல் பிரிவு 304–ஆ–இன் கீழ் 13/16–ஆம் தேதியன்று ஜுலை 2002 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றம் தண்டனைத் தீர்ப்புடன் உடன்பட்டு, அளிக்கப்பட்ட துண்டனையை 10 வருடங்களிலிருந்து 7 வருடங்களாக குறைத்து சந்திகாரிலுள்ள பங்சாப் மற்றும் உறரியானா உயர் நீதிமன்றத்தால் குற்றவியல் மேல்முறையீடு எண் 1189–எஸ்பி/2002–இல் 15.5.2009 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையில் மனக்குறையுற்ற மேல்முறையீட்டாளர்–மக்கன் சிங் இந்நீதிமன்றத்தை அணுகினார்.

2. இறந்த மஞ்சித் கவுர் என்பவர் 28.1.1996 அன்று மேல்முறையீட்டாளர்–மக்கான் சிங்கை திருமணம் புரிந்தார். மேல்முறையீட்டாளர், மரணமுற்ற மஞ்சித் கவுரின்

பெற்றோரிடமிருந்து வரதட்சனை கோரினார் என்பது அரசு தரப்பின் வழக்காகும். மேல்முறையீட்டாளரின் கோரிக்கை இணங்க ரூபாய் 30,000/– தொகையை இறந்த மஞ்சித் கவுரின் பெற்றோர் மேல்முறையீட்டாளருக்கு கொடுத்தனர் என்பதும் அரசு தரப்பு வழக்காகும். மேல்முறையீட்டாளர் திரும்பவும் ரூபாய் 2 லட்சம் அளிக்கும்படி கோரினார். அரசு தரப்பின்படி மேல்முறையீட்டாளர் அந்த தொகையை மாஸ்கோவிற்கு செல்வதற்காக பயன்படுத்தினார். எனினும் மார்ச் 1998 இல் மாஸ்கோவில் இருந்து திரும்பி வந்த பிறகும் அவர் அமேரிக்காவிற்கு செல்வதற்காக இறந்த மஞ்சித் கவுரிடம் ரூபாய் 6 லட்சம் கொண்டுவரச் சொல்லி துன்புறுத்தினார். அரசுத் தரப்பின்படி இந்த துன்புறுத்துள்களினால் வெறுப்படைந்த இறந்த மஞ்சித் கவுர் 21.4.1998 அன்று விஷம் உட்கொண்டார். மேல்முறையீட்டாளர் முதலில் இறந்த மஞ்சித் கவுரை லத்வாவிலுள்ள சமூக சுகாதார மையத்திற்கு அழைத்து சென்றார். அதன் பிறகு குருக்ஷேத்ராவில் உள்ள எல்.என்.ஜே.பி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எல்.என்.ஜே.பி மருத்துவமனையில் இருந்து இறந்த மஞ்சித் கவுரை குருஷேத்ராவில் உள்ள டாக்டர் ஹெச். கே. சோப்தியின் (அ.சா.1) தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

3. இறந்த மஞ்சித் கவுரின் மரணவாக்கு மூலத்தை (எக்ஸ். டிஒ/சி) குருக்ஷேத்ரா முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் செல்வி. வாணி கோபால் ஷர்மா (எ.த.சா – 1) அவர்களால் பதிவு செய்யப்பட்டு அதில் இறந்தவர் தான் காய்ச்சலில் இருந்ததாகவும் அங்கிதியில் பல மருந்துகள் இருந்ததாகவும் அதில் அவர் பச்சை நிறமருந்தை உட்கொண்டதாகவும் கூறினார். அதன்பிறகு இறந்த மஞ்சித் கவுரின் பெற்றோர் கமலேஷ் கவுர் (அ.சா.11) மற்றும் பான்சிங் (அ.சா.13) மருத்துவமனைக்கு அடுத்த நாள் வந்தனர். கு.வி.மு.ச. பிரிவு 164 ன் கீழ் இறந்த மஞ்சித் கவுர்ரிடம் வாக்குமூலம் வாங்க சொல்லி அவரது பெற்றோர் 24/04/1998 இல் கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கையின் பெயரில் குறுக்ஷேத்ரா முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் செல்வி. காஞ்சன் நரியலா (அ.சா.6) இறந்த மஞ்சித் கௌரின் வாக்குமூலத்தை (எக்ஸ் பி.இ) 24/04/1998 அன்று பதிவு செய்தார். அதில் அவர் கணவர் யு.எஸ்.ஏ செல்வதற்காக ஆறு லட்சம் ரூபாய் கேட்டதாக கூறினார் இந்த மரணவாக்குமூலத்தை (எக்ஸ். பி.இ) பொருத்தவரையில் மேல்முறையீட்டாளரும் அவர்தம் பெற்றோரும் விஷத்தன்மை கொண்ட பொருளை இறந்த மஞ்சித் கவுருக்கு கொடுத்ததாக கூறப்படுகிறது. இரண்டாவது மரணம் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு

25/04/1998 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 28/04/1998 அன்று மேற்கூறப்பட்ட மரண வாக்குமூலத்தை பதிவு செய்த விசாரணை அதிகாரி (சுருக்கமாக வி..அ.) குருத்வையா ராம் (அ.சா.14) இறந்தவரின் வாய்மொழி வாக்குமூலத்தை (சா. பி.வி) பதிவு செய்தார். 28/4/1998 அன்று இறந்த மஞ்சித் கவுர் சண்டிகரில் உள்ள பி.ஜி.ஐ.எம்.எஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் அங்கே 09/05/1998 தேதியன்று அவர் இறந்துவிட்டார்.

4. விசாரணையின் முடிவில், காவல் துறைத் துணை கண்காணிப்பாளர் கே.கே. ராவ் (எ.த.சா.2) அவர்கள் குற்றவாளியை அப்பாவி என்று கருதினார். காவல் துறை உதவியாளர் குருத்வாயா ராம் (அ.சா.14) வி.அ. இதில் விசாரணைக்காக போதுமான காரணங்கள் இருந்ததால் அவர் குற்ற அறிக்கையை பதிவு செய்தார். இ.த.ச. பிரிவு 304–பி ன் கீழ் குற்றத்திற்கு குற்றச்சாட்டு வனையப்பட்டது. விசாரணையின் முடிவில் இ.த.ச. பிரிவு 304–பி ன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு விசாரணை நீதிமன்றம் தண்டனை வழங்கியது. இருப்பினும் குற்றம் சாட்டப்பட்ட மேலும் இருவர் அதாவது மேல்மலையீட்டாளரின் பெற்றோருக்கு விசாரணை நீதிமன்றம் சந்தேகத்தின் பலனை கருத்தில் கொண்டு விடுதலை அளித்தது.

மேல்முறையீட்டாளருக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கியது. உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளரால் மேல்முறையீடு செய்யப்பட்டதில் உயர்நீதிமன்றம் இ.த.ச பிரிவு 304(பி) ன் கீழ் தண்டனையை உறுதி செய்து தண்டனை காலத்தை ஏழாண்டுகளாக குறைத்தது இதில் அதிருப்தி அடைந்ததன்பேரில் தற்போதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

5. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஆர். கே. ரத்தோர் மற்றும் மாநில அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பியூஷ் ஹன்ஸ் அவர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

6. விசாரணை நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் முதல் மரண வாக்கு மூலத்தில் (சான்றாவணம். டிஒ/சி) இறந்த மஞ்சித் கவுர் மருந்தை தவறுதலாக உட்கொண்டேன் என்று சொன்னதை கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்று திரு. ரத்தோர் சமர்ப்பித்தார். எனவே இறப்பானது விபத்து என்று அவர் சமர்ப்பித்தார். இரண்டாவது மரணம் வாக்குமூலம் (சான்றாவணம். பி.இ) ஆனது மூன்று நாட்களுக்கு பிறகு பதிவு செய்யப்பட்டது மற்றும் இறந்த மஞ்சித் கவுரின் பெற்றோர் மேல்முறையீட்டாளரை சிக்கவைக்கம்படி அவளை

தூண்டியதன்பேரில் பதிவு செய்யப்பட்டது என்று அவர் மேலும் சமர்ப்பித்தார். மரண வாக்குமூலங்களுக்கு இடையே முரண்பாடு எழுகையில் சந்தேகத்தின் பலனை பெறுவதற்கு குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமை உண்டு என்று சமர்ப்பித்தார். எனவே தண்டனை உத்தரவை தள்ளுபடிசெய்வதற்குரியது என்று சமர்ப்பித்தார்.

7. ஒவ்வொரு மரண வாக்குமூலமும் தனித்தனியே கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படவேண்டும் என்று திரு. ஹன்ஸ் கடுமையாக சமர்ப்பித்தார். முதல் மரண வாக்குமூலம் (சான்றாவணம் டிஒ/சி) இறந்த மஞ்சித் கவுரின் கணவரின் தூண்டுதலின் பெயரில் கொடுக்கப்பட்டது என்றும், ஆனால் இரண்டாவது மரண வாக்குமூலமானது (சான்றாவணம் பி.இ) இறந்தவர் தாமாக தன் சொந்த விருப்பத்தில் கொடுத்தது என்றும் கீழமை நீதிமன்றங்கள் சரியாக கண்டறிந்துள்ளன என்று அவர் சமர்ப்பித்தார். ஒரே சமயத்தில் நடந்த நிகழ்வுகளை கருத்தில் கொண்டு இந்த நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று அவர் மேலும் சமர்ப்பித்தார் தனது சமர்ப்பித்தலுக்கு ஆதரவாக கீழ்வரும் தீர்ப்புகளை சார்வுற்றார்.

ஹர்ஜித் கௌர் எதிர் பஞ்சாப் மாநிலம் 1,

சயாரா பானு எதிர் மகாராஷ்டிரா மாநிலம் 2,

ஷேர்சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் 3,

முனவர் எதிர் உ.பி மாநிலம் 4,

லக்கான் எதிர் எம்.பி. மாநிலம் 5,

சுதாகர் எதிர் எம்பி மாநிலம் 6,

ராஜூ தேவடே எதிர் மகாராஷ்டிரா மாநிலம் 7,

காஷ்மிரா தேவி எதிர் உத்தரகாண்ட் மாநிலம் 8,

மற்றும்

உ.பி மாநிலம் எதிர் வீர்பால் 9.

---

1. (1999) 6 எஸ்.சி.சி 545
2. (2007) 12 எஸ்.சி.சி 562
3. (2008) 4 எஸ்.சி.சி 265
4. (2010) 5 எஸ்.சி.சி 451

5. (2010) 8 எஸ்.சி.சி 514

6. (2012) 7 எஸ்.சி.சி 569

7. (2016) 11 எஸ்.சி.சி 673

8. (2020) 11 எஸ்.சி.சி 343

9. (2022) 4 எஸ்.சி.சி 741

8. மரண வாக்குமூலம் தொடர்பான சட்டம் லக்கான் (மேற்கூறிய) வழக்கில் இந்த நீதிமன்றத்தால் சுருக்கமாக கூறப்பட்டது, இதில் நீதிமன்றம் இந்த பிரச்சனையை பொறுத்து பல்வேறு வாய்மொழி தீர்வுகளை கருத்தில் கொண்டு இவ்வாறு கூறியது.

"21. மேற்சொன்னதை கருத்திற்கொண்டு பார்க்கையில், மரண வாக்குமூலம் குறித்த வழக்கு பிரச்சினையில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில், மரண வாக்குமூலம் உண்மையானது, நம்பத்தகுந்தது என்றும், மரணமுற்றவர் மரணவாக்குமூலத்தை அளிக்க உடல் ரீதியாகவும் மணரீதியாகவும் தகுதியுடையவராக இருக்கையில் அது பதிவு செய்யப்பட்டது என்றும், அது எந்த ஒரு அறிவுறுத்தல்/கட்டாயம்/தூண்டுதலின் பேரிலோ

அளிக்கப்படவில்லை என்றால், அதுவே தண்டனைத் தீர்ப்பை பதிவு செய்வதற்கான அடிப்படை காரணமாகும் என்று குறிப்பிடலாம். அத்தகைய நேர்வில் உறுதியூட்டள் அவசியமில்லை. பல்வேறு மரண வாக்குமூலங்கள் இருக்கும்பட்சத்தில், அவற்றுக்கிடைய முரண்பாடு உள்ளபோது, பொதுவாக, அவற்றின் உண்மைத்தன்மை குறித்த சந்தேகத்திற்கு வழிவகுக்கும் சூழ்நிலை இல்லாதபோது, நீதித்துறை நடுவர் போன்ற உயர் அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தில் சார்வுறலாம். மரணவாக்குமூலம், தன்னிச்சையாக அறிக்கப்படவில்லை என்ற சூழ்நிலையிலும் மேலும் அது மற்ற சாட்சியத்தால் உறுதி செய்யப்படவில்லை என்றபோதிலும், நீதிமன்றமானது ஒவ்வொரு வழக்கின் சங்கதிகளையும் மிக கவனத்துடன் ஆராய்ந்து, எந்த மரண வாக்குமூலம் உண்மையில் நம்பத்தகுந்தது என்பதைக் குறித்து தீர்மானிக்கவேண்டும்."

9. நீதிமன்றம் மரண வாக்குமூலம் உண்மையானது மற்றும் நம்பத்தகுந்தது என்பதையும்; அது இறந்தவர் உடல் மற்றும் மன உறுதியுடன் இருந்த நிலையில் ஒரு நபரால் பதிவு செய்யப்பட்டதா என்பதையும்; அது ஏதேனும் வற்புறுத்தல்/ கட்டாயம்/ தூண்டுதலின்பேரில் அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் நீதிமன்றம் ஆய்வு செய்ய வேண்டும் என்பதை இவ்வாறு காணலாம். மரணவாக்குமூலம் நம்பத்தகுந்ததாக இருந்தால் அதுவே தண்டனை பதிவு செய்வதற்கான ஒரே அடிப்படையாக இருக்கும் எந்த ஒரு உறுதிப்படுத்தலும் தேவையில்லை. ஒருவேளை பல மரணவாக்குமூலங்கள் இருப்பின் நீதித்துறை நடுவர் போன்ற உயர் அதிகாரியின் முன்னிலையில் பதிவு செய்யப்படும் மரணவாக்குமூலம் நம்பகத்தன்மை கொண்டது. இருப்பினும் அதன் உண்மை தன்மை குறித்து எந்த சந்தேகமும் எழும் சூழ்நிலை இல்லை என்ற நிபந்தனையுடன் இது உள்ளது. ஒருவேளை அந்த வாக்குமூலம் தாமாக முன் வந்து கொடுக்கப்பட்டதில்லை அல்லது அதனை ஆதரிக்க எந்த ஒரு சாட்சியமும் இல்லை என்ற சூழ்நிலையில், நீதிமன்றம் ஒரு தனிப்பட்ட வழக்கில் உண்மைகளை மிகவும் கவனமாக ஆய்வு செய்து அதன் பிறகு

எந்த வாக்குமூலம் நம்பகத்தன்மையுடையது என்பதை குறித்து முடிவு செய்தல் வேண்டும்.

10. தற்போதைய வழக்கில் இரண்டு மரண வாக்குமூலங்கள் உள்ளன. முதலாவது செல்வி. வாணி கோபால் (எ.த.சா.1) அவர்களால் குறித்த காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. இரண்டாவது செல்வி காஞ்சன் நாரியாலா(அ.சா.6) அவர்களால் பதிவு செய்யப்பட்டது. முதல் மரண வாக்குமூலத்தில் (சான்றாவணம் டிஒ/சி) இறந்த மஞ்சித் கவுர் மேல்முறையீட்டாளர் மற்றும் அவர் குடும்பத்தினரை குற்றத்திலிருந்து விடுவித்து இருந்தார். இரண்டாவது மரண வாக்குமூலத்தில் (சான்றாவணம் பி.இ) மேல்முறையீட்டாளர் மற்றும் அவரது பெற்றோரை உட்புகுத்தி இருந்தார். முதலாவது மரண வாக்குமூலத்தில் (சான்றாவணம் டிஒ/சி) அவர் தனக்கு காய்ச்சல் இருந்ததாகவும் தவறுதலாக பச்சை நிறம் மருந்தை உட்கொண்டதாகவும் கூறியிருந்தார். செல்வி. வாணி கோபால் ஷர்மா (எ.த.சா.1) அவரிடம் கேட்கப்பட்ட ஒரு தனிப்பட்ட கேள்விக்கு; அதாவது அவருக்கு யாரிடமாவது சந்தேகம் இருக்கிறதா என்ற கேள்விக்கு அவர் எதிர்மறையாக பதில் அளித்துள்ளார். வாக்குமூலம் கொடுக்கும் சமயம் முழுவதும்

நோயாளி சுயநினைவுடன் இருந்தார் என்று டாக்டர் சோப்தி (அ.சா.1) அவர்களால் முதல் மரண வாக்குமூலம் (சான்றாவணம் டிஒ/சி) அங்கீகரிக்கப்பட்டது.

11. அவருடைய இரண்டாவது மரண வாக்குமூலத்தில் (சான்றாவணம். பி.இ) மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் தாய் அவரை பிடித்துக் கொள்ள மேல்முறையீட்டாளர் அவருக்கு வலுக்கட்டாயமாக மருந்தை கொடுத்ததாகவும் கூறியுள்ளார்.

12. முதல் மரண வாக்குமூலத்தை (எக்ஸ். டிஒ/சி) பதிவு செய்த செல்வி. வாணி கோபால் ஷர்மாவை (எ.த.சா.1) அரசு தரப்பு விசாரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எதிர் தரப்பு அவரை (எ.த.சா. 1) விசாரிக்க அவசியம் ஏற்பட்டது. அவரின் சாட்சியத்தை ஆய்வு செய்ததில் காவல் துறை உதவி ஆய்வாளர் ரஞ்சித் சிங்–ன் கோரிக்கைக்கிணங்கி டாக்டர் சோப்தி (அ.சா.1) அவர்களின் மருத்துவமனைக்கு சென்று அங்கே திருமதி. மஞ்சித் கவுர் வாக்குமூலம் கொடுக்க தகுதியுடையவரா என்று கேட்க மருத்துவர் அவர் வாக்குமூலம் கொடுக்க தகுதியுடன் உள்ளார் என்று கருத்து தெரிவித்தார்.

அதன் பிறகே அவர் இறந்த மஞ்சித் கௌரின் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அவர் வாக்குமூலம் பதிவு செய்யும்போது மருத்துவர் சோப்தியை (அ.சா.1) தவிர அங்கு வேறு யாவருமில்லை என்றும் மற்ற அனைவரும் வெளியே அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் கூறினார். இறந்த மஞ்சித் கவுர் நல்ல மனநிலையில் இருப்பதை கண்டதாக அவர் கூறினார். ஆனாலும் மஞ்சித் கவுருக்கு சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளவும் தன்னைத்தானே தயார் செய்து கொண்டு தன்னிச்சையாக வாக்குமூலம் அளிக்கவும் நேரம் கொடுத்ததாக கூறினார். இறந்த மஞ்சித் கவுர் தன்னிச்சையாக வாக்குமூலம் அளிக்க தயாராக இருந்தார் என்பதில் அவர் திருப்தி அடைந்திருந்தார் என்பதை தெரிவித்தார். அதன் பிறகே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பிறகு இறந்த மஞ்சித் கவுரின் வலது பெருவிரல் ரேகை அச்சு வைக்கப்பட்டது. மஞ்சித் கவுர் முழுவதும் தெளிவான மனநிலையிலேயே வாக்குமூலம் அளித்தார் என்று அவர் சான்றுரைத்து, அதனை சான்றோப்பமும் அளித்தார். டாக்டர் சோப்தி (அ.சா.1) அளித்த சான்றிதழ் பற்றியும் அவர் சான்றுரைத்தார்.

13. செல்வி வாணி கோபால் ஷர்மா (எ.த.சா.1) கூடுதல் அரசு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அவரின் குறுக்கு விசாரணையில், இறந்த மஞ்சித் கவுர் தன்னிச்சையாகவே வாக்குமூலத்தை கொடுத்தார் என்பதில் திருப்தியுற்றார் என்றும் அதன் பிறகே அதனை பதிவு செய்தார் என்றும் அதனை பதிவு செய்த பிறகும் அவர் திருப்தியுற்றார் என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

14. செல்வி காஞ்சன் நாரியாலா (அ.சா.6) இரண்டாவது மரண வாக்குமூலத்தை (சான்றாவணம் பி.இ) பதிவு செய்தவர், இறந்த மஞ்சித் கவுர் தானாக முன்வந்து வாக்குமூலத்தை கொடுத்தார் என்பதில் மனநிறைவடைந்தார். அருகில் இருந்த உறவினர்கள் வெளியே செல்லும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர் வாக்குமூலம் பதிவு செய்யும்பொழுது இறந்த மஞ்சித் கௌரை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. இறந்த மஞ்சித் கௌரின் தகுதி நிலை குறித்து மருத்துவ அலுவலரிடம் சான்றிதழ் பெற வேண்டும் என்று தோன்றவில்லை என்றும் ஏனென்றால் அவர் வாக்குமூலம் கொடுக்க தகுதியுடன் இருந்தார் என்றும் அவர் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டார். அவர் மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட எல்.என்.ஜே.பி

மருத்துவமனையின் மருத்துவ அலுவலரிடம் எந்த ஒரு கருத்தும் பெறவில்லை என்றும் ஒப்புக்கொண்டார். பான்சிங் (அ.சா.13) மற்றும் கமலேஷ் கவுர் (அ.சா.11) இறந்த மஞ்சித் கவுரின் தந்தை மற்றும் சகோதரி அங்கே மருத்துவமனையில் இருந்தனர் என்பதை ஒப்புக்கொண்டார்.

15. இந்த வழக்கில், இரண்டு மரண வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டு இருந்தன. இரண்டுமே நீதித்துறை நடுவரால் பதிவு செய்யப்பட்டது. அதில் எந்த மரண வாக்குமூலத்தை நம்புவது என்ற கடினமான கேள்விக்கு நாங்கள் பதில் அளிக்க வேண்டும்.

16. முதலாம் மரண வாக்குமூலம் (சான்றாவணம். டிஒ/சி) செல்வி. வாணி கோபால் ஷர்மா– வால் (எ.த.சா.1) பதிவு செய்யப்பட்டது. அதனை ஆய்வு செய்து பார்க்கையில் இறந்த மஞ்சித் கவுரின் வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கு முன்பு டாக்டர். சோப்தி (அ.சா.1) இறந்தவர் வாக்குமூலம் கொடுக்க உறுதியான மனநிலையில் இருந்தாரா என்பதை ஆய்வு செய்தார். சான்றிதழுக்குப் பிறகு, செல்வி. வாணி கோபால் ஷர்மா (எ.த.சா.1) இறந்த மஞ்சித் கவுர் தாமாக முன்வந்து

வாக்குமூலத்தை கொடுத்தாரா, இல்லையா என்பதை பற்றி திருப்தி அடைந்த பிறகே அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தார். மேல் சொல்லப்பட்ட மரண வாக்குமூலம் (சான்றாவணம் டிஒ/சி) இறந்த மஞ்சித் கவுர் கொடுக்கும் சமயம் முழுவதும் சுயநினைவுடனே இருந்தார் என்று டாக்டர் சோப்தி (அ.சா.1) அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. வாக்குமூலம் பெற்ற பிறகும் கூட இறந்தவர் தன்னிச்சையாகவே வாக்குமூலத்தை கொடுத்தார் என்பதை உறுதி செய்ததாகவும் செல்வி. வாணி கோபால் ஷர்மா (எ.த.சா.1) சான்றுரைத்தார்.

17. இதற்கு எதிராக, மூன்று நாட்களுக்கு பிறகு நீதித்துறை நடுவர் செல்வி. காஞ்சன் நாரியாலா (அ.சா.6) அவர்கள் பதிவு செய்த இரண்டாம் மரண வாக்குமூலத்தை (சான்றாவணம் பி.இ) பொருத்த வரையில் அது இறந்த மஞ்சித் கௌரின் வாக்குமூலம் கொடுக்கும் உறுதிநிலையை மருத்துவரின் ஆய்வின்றி பதிவு செய்யப்பட்டது. வாக்குமூலம் எல்.என்.ஜே.பி மருத்துவமனையில் மருத்துவர்கள் இருக்கும்பொழுது பெறப்பட்டிருந்தாலும் கூட இறந்தவரின் உறுதி நிலையை பொறுத்து மருத்துவர்களின் ஆய்வு தேவைப்படவில்லை என்று செல்வி. காஞ்சன் நாரியாலா (அ.சா.6) நினைத்தார். இறந்த மஞ்சித் கவுரின் தந்தை பான் சிங்

((அ.சா.13) மற்றும் சகோதரி கமலேஷ் கவுர் (அ.சா.11)ஆகிய இருவரும் மருத்துவமனையில் இருந்தனர் என்பதை செல்வி காஞ்சன் நாரியாலா ஒப்புக்கொண்டார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கது. இரண்டாம் மரணம் வாக்குமூலம் (சான்றாவணம். பி.இ) அவரது உறவினர்கள் பயிற்றுவித்து கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சாதியக்கூறை நிராகரிக்க முடியாது.

18. அது மட்டுமின்றி, கே.கே.ராவ் (எ.த.சா.2) முன்னாள் காவல்துறை கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி) சாட்சியத்தை குறிப்பிடுதலும் பொருத்தமானது. அவரின் சான்றுரையில் இவ்வாறு கூறியுள்ளார்:

> " இருப்பினும் திருமதி. மஞ்சித் கவுரின் வாக்குமூலத்தின் கூற்றை எந்த சாட்சியமும் ஆதரிக்கவில்லை. எனது விசாரணையின் படி, 24/4/1998 தேதியிட்ட வாக்குமூலம் திருமதி. மஞ்சித் அவரது உறவினர்களால் பயிற்றுவித்த பிறகு அளிக்கப்பட்டது என்றும், அதில் சம்பவத்தின் உண்மையான கூற்று இல்லை என்பதாகும் ".

19. செல்வி. வாணி கோபால் ஷர்மா (எ.த.சா.1) மற்றும் திரு. கே.கே. ராவ் (எ.த.சா.2), காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோரை அரசுத் தரப்பு விசாரிக்கவில்லை என்பது மேலும் கவனத்தில் கொள்ள வேண்டியது. எனவே இது விசாரணை அதிகாரியின் நியாயம் மற்றும் பாரபட்சமற்ற தன்மை குறித்து கடுமையான சந்தேகத்தை உருவாக்குகிறது. அதுமட்டுமின்றி, அதே சாட்சியங்களின் அடிப்படையில், மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் தாயிக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பார்வையில் அந்த சாட்சியங்களின் அடிப்படையிலேயே மேல் முறையீட்டாளரை தண்டிப்பது என்பது எங்களின் பார்வையில் முறையற்றது.

20. ஆகவே இந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இரண்டாம் மரணவாக்குலத்தை (சான்றாவணம் பி.இ) விட முதல் மரணவாக்குமூலமே (சான்றாவணம் டிஒ/சி) மிகவும் நம்பகமானதாக கருதப்பட வேண்டும். எவ்வாறாயினும், குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேருக்கும் எதிரான சாட்சியங்கள் முற்றிலும் ஒரே மாதிரியாக இருந்த போது விசாரணை

நீதிமன்றத்தால் மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சந்தேகத்தின் பலன் தற்போதைய மேல்முறையீட்டாளருக்கும் சமமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

21. தீர்ப்பை பகிர்வதற்கு முன், தண்டனையை ஆதரிப்பதற்காக அரசின் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஸ்ரீ பியூஷ் ஹன்ஸ் மேற்கொண்ட கடினமான முயற்சிகளுக்கு எங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

22. முடிவில், கீழ்க்கண்ட உத்தரவை வழங்குகிறோம்:

i) மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது;

ii) சண்டிகரிலுள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் 15/05/2009 அன்று மேல்முறையீட்டு எண் 1189-எஸ்பி/2002-ல் பகரப்பட்ட தீர்ப்பு மற்றும் 13/16 ஜூலை 2002 இல் விசாரணை நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண் 55/1998 இல் பகரப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவும் ரத்து செய்யப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகிறது;

iii) மேல் முறையீட்டாளர் குற்றம் சாட்டப்பட்ட அனைத்து குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார் மற்றும் அவரது பிணை ஆவணங்கள் விடுவிக்கப்படுகிறது.

23. ஏதேனும் விண்ணப்பங்(கள்) நிலுவையில் இருப்பின், மேலே உள்ள விதிமுறைகளின் படி அது தீர்வுசெய்யப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."